

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (10.3.2026) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பகுதிகளுக்கான இந்திய கடற்படைத் தலைவர் ரியர் அட்மிரல் உபள் குண்டு மரியாதை நிமித்தம் சந்தித்து பேசினார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.3.2026) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 78 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவில் இராமநாதபுரம் மாவட்டம், வல்லிமாடன்வலசையில் கட்டப்பட்டுள்ள சமத்துவபுரம், நாமக்கல் மாவட்டம், வையப்பமலையில் அமைக்கப்பட்டுள்ள சுப்ரமணிய சாமி திருக்கோவில் மலைச்சாலை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அலுவலகக் கட்டடங்கள், பொது சுகாதார கட்டடங்கள், சமுதாயக்கூடங்கள், பள்ளிக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஆணையர் பா. பொன்னையா, கூடுதல் ஆணையர் லலித் ஆதித்யா நீலம், ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னை மாநகராட்சி சார்பில் உலக மகளிர் தின விழா:

# சிறப்பாகப் பணியாற்றிய 25 பேருக்கு ‘மகளிர் சாதனையாளர்’ விருதுகள்!

## மேயர் பிரியா வழங்கிப் பாராட்டினார்!



சென்னை,மார்ச்.11-

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் உலக மகளிர் தின விழா மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தலைமையில் ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நேற்று (10.03.2025) நடைபெற்றது.

இவ்விழாவில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் பங்கேற்று, பல்வேறு துறைகளில் சிறப்பாகப் பணியாற்றிய 25 மகளிர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மகளிர் சாதனையாளர் விருதுகளை வழங்கிப் பாராட்டினார். மேலும் சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு, மகளிர் அலுவலர்களுக்கிடையே நடைபெற்ற கவிதைப் போட்டி, சைகை நடிப்பு (Dump Charades), பாட்டுப் போட்டி உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மகளிருக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை மேயர் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் மேயர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது :

தமிழகத்தில் பெண்களின் முன்னேற்றம் இன்று மிகச் சிறப்பாக உள்ளது. இங்கு வந்துள்ள மகளிர் அனைவருமே மாநகராட்சியில் பணியில் சேர்ந்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கிறீர்கள். ஆனால் இதுவே ஒரு 10 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்பாக பாட்டி காலத்தில் பள்ளிக்கு செல்வதே கடினமான ஒன்றாக இருந்தது. 10ஆம் வகுப்பு முடித்தாலே ஒரு பெரிய படிப்பு முடித்தது போல் சொல்வார்கள். அம்மா காலத்தில் கல்லூரி செல்வதே கடினமாக இருக்கும். ஆனால் இன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மகளிருக்கும் கல்வி வழங்க வேண்டும். ஒரு தனி நபரிடம் பறிக்க முடியாத சொத்து கல்வி தான் என்று சொல்லி, முக்கியமாக பெண்களுக்கு கல்வி தான் முக்கியம் என்று பெண்களுக்கான முன்னேற்றத்தை நம்முடைய தமிழ் நாட்டில் ஒவ்வொரு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள்.

மாநகராட்சி உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அதே போல் வரும் சட்டமன்றத் தேர்தல்களிலும் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் என முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

பெண்களுக்குத் திறமை இருந்தும், அதை வெளிப்படுத்தச் சரியான தளம் அமைவது கடினமாக இருந்தது. அத்தகைய சரியான தளம் அமைந்தால் தான் பெண்களின் திறமை வெளிவரும். அந்த வகையில் இன்று தமிழகத்தில் சிவில், மருத்துவம், வானூர்தி என அனைத்து துறைகளிலும் பெண்கள் சாதிக்க அதற்கான தளத்தை முதல்வர் அவர்கள் ஏற்படுத்தி தந்துள்ளார்கள்.

ஒரு பெண்ணின் அழகு என்பது நிறத்திலோ அல்லது உடையிலோ இல்லை. அவளது தன்னம்பிக்கையிலும், தடைகளைத் தாண்டி அவள் அடையும் வெற்றியிலுமே அழகு உள்ளது.

“பெண்கள் தங்களுக்காகவும் தினமும் சிறிது நேரம் ஒதுக்க வேண்டும். உடல் மற்றும் மன ஆரோக்கியத்தைப் பேண தியானம் மற்றும் உடற்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மனவலிமையில் ஆண்களை விட பெண்களே சிறந்தவர்கள்.”

வீட்டில் முடங்கிக் கிடக்கும் மற்ற பெண்களையும் ஊக்கப்படுத்தி, அவர்களின் முன்னேற்றத்திற்கு உங்களால் முடிந்த உதவிகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

இவ்விழாவில் துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர்கள் டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), பாலவாக்கம் த. விசுவநாதன் (கல்வி), திருமதி சர்பஜெயா தாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு (ம) நிதி), மாநகர மருத்துவ அலுவலர் டாக்டர் ரமோனா, மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விளையாட்டு வீரர்களுக்கான விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ்

# மருத்துவ - பல் மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கை!

சென்னை, மார்ச்.11-

தமிழ்நாடு அரசு விளையாட்டு வீரர்களின் நலன் மற்றும் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து மேற்கொண்டு வரும் முயற்சிகளின் விளைவாக, மாநிலத்தின் விளையாட்டு வீரர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் அதிகளவில் பதக்கங்களை வென்று குறிப்பிடத்தக்க சாதனைகள் புரிந்து வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு, மாநிலத்தின் திறமையான விளையாட்டு வீரர்களை ஊக்குவித்து அவர்களின் உயர்கல்வி முன்னேற்றத்தை உறுதி செய்யும் நோக்கில் பல்வேறு முன்னேற்றமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரு கிறது. அவற்றில் முக்கியமான ஒன்றாக, கல்லூரிகளில்விளையாட்டு ஒதுக்கீட்டின் (Sports Quota) கீழ் இடஒதுக்கீடு வழங்கும் திட்டம் அமைகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ், 1994-1995 கல்வியாண்டில், தமிழ்நாடு அரசின் மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளில் MBBS மற்றும் BDS பாடப்பிரிவுகளில் சேர்க்கைக்காக விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் முதற்கட்டமாக 3 இடங்கள் வழங்கப்பட்டன. இதன் முக்கிய நோக்கம், திறமையான விளையாட்டு வீரர்கள் மருத்துவக் கல்வியைத் தொடர்ந்து பயிலும் வகையில் அவர்களை ஊக்குவிப்பதாகும்.

பின்னர், மாநிலத்தில் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கையும், மாணவர் சேர்க்கை எண்ணிக்கையும் அதிகரித்ததை கருத்தில் கொண்டு, 01.06.2018 அன்று வெளியிடப்பட்ட அரசாணைநிலை எண்.376, மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை (MCA-1) ஆணையின்படி, விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் வழங்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை 3 இலிருந்து 8 ஆக உயர்த்தப்பட்டது. அதில் MBBS பாடப்பிரிவிற்கு 7 இடங்களும், BDS பாடப்பிரிவிற்கு 1 இடமும் ஒதுக்கப்பட்டு,2018-2019 கல்வியாண்டு முதல் அமல்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு அரசு விளையாட்டு வீரர்களின் நலன் மற்றும் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து மேற்கொண்டு வரும் முயற்சிகளின் விளைவாக, மாநிலத்தின் விளையாட்டு வீரர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் அதிகளவில் பதக்கங்களை வென்று குறிப்பிடத்தக்க சாதனைகள் புரிந்து வருகின்றனர்.

விளையாட்டு வீரர்களுக்கான விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கைக்கான இடங்களின் எண்ணிக்கையை உயர்த்தி வழங்கிட வேண்டுமென விளையாட்டு வீரர்கள் கோரிக்கை வைத்தனர்.

இதனை தொடர்ந்து முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, துணை முதலமைச்சர் அவர்களின் தலை மையில் நடைபெற்ற 47வது செயற்குழு கூட்டத்தில், விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் கல்லூரி சேர்க்கைக்கான இடங்களை அதிகரிப்பது தொடர்பாக விவாதிக்கப்பட்டது. அதில், விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் கல்லூரி சேர்க்கைக்கான இடங்களை உடனடியாகஅதிகரிக்க ஒப்புதல் வழங்கப்பட்டதுடன், இதற்கான முன்மொழிவை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தற்போது அரசாணை நிலை எண்.92, மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் (MCA-1) துறை, நாள்.10.03.2026-ன்படி தமிழ்நாடு அரசு,அரசு மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளில் MBBS படிப்புக்கானஇடங்கள் 7-லிருந்து 13 ஆகவும்BDS படிப்புக்கான இடங்கள் 1-லிருந்து 2-ஆகவும் விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் வழங்கப்படும் இடங்களை அதிகரித்து அரசு அனுமதி வழங்கியுள்ளது.



கழகத் தலைவர்–முதல்வர் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு சேத்துப்பட்டு, சர்வோதயா இல்ல மாணவிகளுக்கு அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. வழங்கினார்.

### ரூ.78.41 கோடி செலவில்

# சமத்துவபுரம் - மலைச்சாலை - கட்டிடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – காணொலியில் திறந்து வைத்தார்!

சென்னை, மார்ச் 11–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.03.2026) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 78 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவில் இராமநாதபுரம் மாவட்டம், வல்லிமாடன்வலசையில் கட்டப்பட்டுள்ள சமத்துவபுரம், நாமக்கல் மாவட்டம், வையப்பமலையில் அமைக்கப்பட்டுள்ள சுப்ரமணிய சாமி திருக்கோவில் மலைச்சாலை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அலுவலகக் கட்டடங்கள், பொது சுகாதார கட்டடங்கள், சமுதாயக்கூடங்கள், பள்ளிக் கட்டடங்கள் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.

**இராமநாதபுரம் மாவட்டம், வல்லிமாடன்வலசை சமத்துவபுரம் திறந்து வைத்தல்**

சமூக நீதியை மேம்படுத்தவும், தந்தை பெரியாரின் சமுதாய சமத்துவ கொள்கையினை பரப்புவதும் சமத்துவபுரம் அமைப்பதன் முக்கியமான நோக்கமாகும். இங்கு 100 வீடுகள் கட்டப்பட்டு 40:25:25:10 என்ற விகிதாச்சார அடிப்படையில் முறையே ஆதிதிராவிடர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் இதர வகுப்பின மக்கள் குடியமர்த்தப்படுகிறார்கள்.

ஒரு சமத்துவபுரத்தில் 100 வீடுகள் அமைக்கப்படுவதோடு, சாலைகள், குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்கு போன்ற பொது உட்கட்டமைப்பு வசதிகளுடன், தேவையின் அடிப்படையில் பொது விநியோகக் கடை, சமுதாயக்கூடம், நூலகக் கட்டடம், பள்ளிக் கட்டடம் மற்றும் கழிவறை, அங்கன்வாடி, விளையாட்டு மைதானம், பூங்கா போன்ற பிற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற இந்த ஐந்து ஆண்டு காலத்தில் 9 சமத்துவபுரங்கள் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக, இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி கொத்தக் கோட்டை, வள்ளிமாடன்வலசையில் 7 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சமத்துவபுரத்தினை முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் திறந்து வைத்தார்.

**நாமக்கல் மாவட்டம், வையப்பமலையில் சுப்ரமணியசாமி திருக்கோவில் மலைச் சாலையை திறந்து வைத்தல்**

நாமக்கல் மாவட்டம் - மல்லசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், வையப்பமலையில் அமைந்துள்ள சுப்ரமணிய சாமி திருக்கோவில் சுமார் 500 ஆண்டுகளுக்கு முந்தைய மிகப் பழமையான கோவிலாகும். இக்கோவிலுக்கு சுற்று வட்டார மற்றும் அண்டை மாவட்டங்களில் இருந்து பக்தர்கள் வாரந்தோறும் திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளி, மாதந்தோறும் கிருத்திகை நாட்கள், சஷ்டி திதிகளில் மற்றும் வருடாந்திர விழாக்களான தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற திருவிழா நாட்களில் பெருமளவில் கடினமான மலை பாதையின் மூலமாக மிகுந்த சிரமத்துடன் நடந்து சென்று மலைமேல் உள்ள முருகனை தரிசனம் செய்து வந்தனர்.

இதனைக் கவனத்தில் கொண்டு, பக்தர்களின் துயர்துடைத்து, அவர்களின் இன்னலை நீக்கிடும் விதமாக, பக்தர்கள் எளிதாக மலைமேல் உள்ள முருகன் கோவிலுக்கு சென்று தரிசனம் செய்திட வசதியாக 850 மீட்டர் நீளத்திற்கு பாதுகாப்பான புதிய மலைச்சாலை மற்றும் வாகனங்கள் நிறுத்த வசதி ஆகியவை 4 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு முதலமைச்சர் அவர்களால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

**முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்**

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களை சந்திக்க வரும் பொதுமக்கள் ஆகியோரின் வசதிக்காக, பழைய பழுதடைந்த கட்டடங்களுக்குப் பதிலாக, புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் திட்டம் 2008ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசால் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, தற்போது வரை 340 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, அதில் 293 கட்டடங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, திருப்பூர் மாவட்டம் தாராபுரம் ஒன்றியத்தில் 5 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவிலும், திருவண்ணாமலை மாவட்டம் - செய்யாறு ஒன்றியத்தில் 5 கோடியே 90 இலட்சம் செலவிலும், தெள்ளார் ஒன்றியத்தில் 5 கோடியே 36 இலட்சம் செலவிலும், புதுப்பாளையம் ஒன்றியத்தில் 5 கோடியே 90 இலட்சத்து செலவிலும், கடலூர் மாவட்டம் - விருத்தாசலம் ஒன்றியத்தில் 5 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவிலும், விழுப்புரம் மாவட்டம் - செஞ்சி ஒன்றியத்தில் 5 கோடியே 56 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவிலும், மதுரை மாவட்டம் - அலங்காநல்லூர் ஒன்றியத்தில் 5 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவிலும், கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் 5 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவிலும் மற்றும் சிவகங்கை மாவட்டம் - சிவகங்கை ஒன்றியத்தில் 5 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள 9 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

இந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடமானது 17,324 சதுர அடி பரப்பளவில், இரண்டு தளங்களுடன், ஊராட்சி ஒன்றிய கூட்ட அரங்கு, பயிற்சி அரங்கு, ஊராட்சி ஒன்றிய தலைவர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கான அறைகள், பொறியியல் பிரிவிற்கென தனி அலுவலகம், கணினி அறை, எழுதுபொருட்கள் பாதுகாப்பு அறை உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூரில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் / திட்ட அலுவலருக்கான அரசுப் பணிகளை 24/7 மணி நேரமும் ஒருங்கிணைத்து, கண்காணித்திட 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புடன் கூடிய முகாம் அலுவலகம்;

கடலூர் மாவட்டம் விருத்தாச்சலத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் இயங்கி வரும் உட்கோட்ட அளவிலான அலுவலகங்களை ஒருங்கிணைக்கும் வகையில், உதவி செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர் உதவி இயக்குனர் மற்றும் பல்வேறு அலுவலர்களுக்கு தனித்தனி அறைகளுடன் 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை உட்கோட்ட அலுவலக வளாகக் கட்டடம்;

ஊரகப் பகுதிகளில் பொது சுகாதாரத்தினை மேம்படுத்திடும் விதமாக, தேனி மாவட்டம் - பெரியகுளம் ஒன்றியம், இ.புதுப்பட்டி ஊராட்சியில் 60 இலட்சம் ரூபாய் செலவிலும், உத்தமபாளையம் ஒன்றியம், கோம்பை ஊராட்சியில் 50 இலட்சம் ரூபாய் செலவிலும், கோயம்புத்தூர் மாவட்டம் - பொள்ளாச்சி (வடக்கு) ஒன்றியம், ராமபட்டினம் ஊராட்சியில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிலும், சிவகங்கை மாவட்டம் சிவகங்கை ஒன்றியம் திடக்கோட்டை ஊராட்சியில் 45 இலட்சத்து ரூபாய் செலவிலும், புதுக்கோட்டை மாவட்டம் - புதுக்கோட்டை ஒன்றியம், ஆதனக்கோட்டை ஊராட்சியில் 50 இலட்சம் ரூபாய் செலவிலும், எம்.குலவாய்பட்டி ஊராட்சியில் 41 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் - மணப்பாறை ஒன்றியம், புத்தாநத்தம் ஊராட்சியில் 65 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள 7 பொதுசுகாதார கட்டடங்கள்;

ஊரகப் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் தங்கள் இல்ல விழாக்களை சிறப்புற எளிமையாக நடத்திட தேனி மாவட்டம் - போடிநாயக்கனூர் ஒன்றியம், டொம்புச்சேரி ஊராட்சியில் 47 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் செலவிலும், கோயம்புத்தூர் மாவட்டம் - சுல்தான்பேட்டை ஒன்றியம் கம்மாலப்பட்டி ஊராட்சியில் 48 இலட்சம் ரூபாய் செலவிலும், புதுக்கோட்டை மாவட்டம் - கந்தர்வகோட்டை ஒன்றியம் கந்தர்வகோட்டை ஊராட்சியில் 80 இலட்சம் ரூபாய் செலவிலும், மதுரை மாவட்டம் - திருமங்கலம் ஒன்றியம் செக்கானூரணி ஊராட்சியில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவிலும், கட்டப்பட்டுள்ள 4 சமுதாயக்கூட கட்டடங்கள்;

கல்விக்கு முக்கியத்துவம் அளித்திடும் வகையில் “குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்” என்று ஊரகப் பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் கட்டடங்கள் அனைத்தும் குழந்தை நேய சிறப்பு அமைப்புகளான உயர்த்தப்பட்ட மேற்கூரை, விசாலமான தாழ்வாரம், காற்றோட்டமிக்க ஜன்னல் வசதிகள், வழுக்காத தரைகள், கற்றலை ஊக்குவிக்கும் சுவர் ஓவியங்கள், வாழ்க்கைப் பாடங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாகும். அதன்படி, சிவகங்கை மாவட்டம் - சிவகங்கை ஒன்றியம், நாச்சாங்குளம் மற்றும் செலுகை ஊராட்சியில் 72 இலட்சத்து ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 பள்ளிக் கட்டடங்கள்,

என மொத்தம் 78 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஆணையர் பா.பொன்னையா, கூடுதல் ஆணையர் லலித் ஆதித்யா நீலம், ஆகியோர் கலந்து கொண்டனர்.

மறைவு : 11-03-2017



9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

முன்னாள் தி.மு.க.நகர செயலாளர்
நகர கூட்டுறவு அர்பன் வங்கி மு.தலைவர்
சோளிங்கர்
நினைவில்வாழும் சு.த.இராதா

அவர்களுக்கு எங்கள் நினைவு அஞ்சலி

மா.சுப்பிரமணியன் B.A.,L.L.B.,
மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்

இராணிப்பேட்டை ஆர்.காந்தி
மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்
இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர்

வழக்கறிஞர் N.R.இளங்கோ B.L.,MP
கழக சட்டத்துறை செயலாளர்

AMV.பிரபாகர ராஜா MLA
விருகம்பாக்கம் சட்ட மன்ற உறுப்பினர்
மாவட்ட இளைஞர்அணி அமைப்பாளர்

S.T.தங்கராஜன் M.A.,
தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்

அன்புத்தந்தை காட்டிய முத்தமிழறிஞரின் பாதையில்
கழகத்தலைவர் வழியில் தொடர்ந்து பயணிப்போம் !

நினைவுகளுடன் :
ச.ரா.சீனிவாசன் M.A.,
சென்னை தெற்கு மாவட்டப் பிரதிநிதி

மற்றும் குடும்பத்தினர்கள்
கலைஞர்நகர் பகுதி தி.மு.க. சென்னை (தெ) மாவட்டம்
சோளிங்கர் நகர தி.மு.க. இராணிப்பேட்டை மாவட்டம்